செ.வெ.எண்: 109 நாள்: 10.3.2017

ந.க.3909/2017/எஸ்5
நாள். .03.2017

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
காஞ்சிபுரம்.

**மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பி.பொன்னையா, இ.ஆ.ப. அவர்களின் பத்திரிக்கைச் செய்தி**

உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் மூலம் காஞ்சிபுரம் மாவட்டத்தில் 9 (ஒன்பது) வட்டங்களில் உள்ள பகுதிகளில் குடும்ப அட்டைதாரர்களின் குறைகளை கேட்டு தீர்வு காணும் பொருட்டு கீழ் குறிப்பிட்டுள்ள மையங்களில் மார்ச் 2017 மாதத்திற்கான மாதாந்திர பொது விநியோகத் திட்ட குறைதீர் கூட்ட முகாம் 11.03.2017 அன்று காலை 10.00 மணிக்கு நடத்தப்படவுள்ளது, இதில் வருவாய் துறையில் பணிபுரியும் உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பிரிவில் பணிபுரியும் அலுவலர்கள், கூட்டுறவுத் துறையில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் கலந்து கொள்ளவிருக்கிறார்கள். அப்பகுதியைச் சுற்றி உள்ள குடும்ப அட்டைதாரர்கள் குடும்ப அட்டைகளில் பெயர், முகவரி மாற்றம் திருத்தம் மற்றும் பொதுவிநியோகத் திட்ட கடைகளின் செயல்பாடுகள் குறித்தும் பொது விநியோகத் திட்ட பொருட்கள் கிடைப்பது குறித்தும் தனியார் துறையில் சந்தையில் விற்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகள் வாங்கும் நுகர்வோர்கள் ஏமாற்றப்படுவது குறித்தும் இக்கூட்டத்தில் தெரிவித்தால் குறைகளை விரைந்து தீர்வு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள கீழே குறிப்பிட்டுள்ள கிராமங்களை சுற்றியுள்ள குடும்ப அட்டைதாரர்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பி.பொன்னையா, இ.ஆ.ப. அவர்கள் கேட்டுக் கொள்கிறார்.

| வ.எண். | வட்டம் | கூட்டம் நடைபெறும் இடங்கள் |
|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | பஞ்சாயத்து அலுவலகம், புரிசை |
| 2 | திருப்பெரும்புதூர் | ஊராட்சி ஒன்றிய அலுவலகம், மௌலிவாக்கம் |
| 3. | உத்திரமேரூர் | கிராம நிர்வாக அலுவலரின் அலுவலகம், தோட்டநாவல் |
| 4. | செங்கல்பட்டு | கிராம நிர்வாக அலுவலரின் அலுவலகம், திருவடிசூலம் |
| 5. | திருக்கழுக்குன்றம் | அரசு நடுநிலைப்பள்ளி,குண்ணவாக்கம் |
| 6. | திருப்போரூர் | கிராம நிர்வாக அலுவலரின் அலுவலகம், சிறுங்குன்றம் |
| 7. | மதுராந்தகம் | அரசு நடுநிலைப்பள்ளி, பாதிரி |
| 8. | செய்யூர் | நூல் நிலையம் அருகில், மலுவங்கரணை |
| 9. | வாலாசாபாத் | ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, கம்மராஜபுரம் |

மாவட்ட ஆட்சித் தலைவர்,
காஞ்சிபுரம்.